கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட கலைமாணித் தேர்வு - 2011/2012(மீள்பரீட்சை)
(ஒக்டோபர் 2017) (வெளிவாரி)

# FA 301 History of Modern Art

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

01. (I) நவீனம் என்னும் பதம் சுட்டும் அர்த்தத்தை தெளிவுபடுத்துக?
(II) நவீன கலையின் தோற்றத்திற்கான சமூக பொருளாதார அரசியல் பின்னணியை விளக்குக.

02. பாரம்பரிய கலையில் இருந்து நவீன கலையை வேறுபடுத்தும் அடிப்படையான பண்புகளை நவீன கலைப்படைப்புக்களை அடிப்டையாகக் கொண்டு விளக்குக.

03. (I) இந்தியாவில் நவீன கலை தோற்றம் பெறுவதற்கு ஏதுவாக இருந்த காரணிகளை அடையாளப்படுத்துக.
(II) சர்வதேச அளவில் பேசப்படும் இந்திய ஓவியர்களில் ஒருவரான ஓவியர் எம்.எவ்.ஹீசைன் அவர்களின் ஓவிய ஆளுமைகளை மதிப்பிடுக.

04. இலங்கை நவீன ஓவிய வரலாற்றில் 43 குழு பெறும் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

05. இலங்கைத் தமிழ்ச் சூழலில் நவீன கலை பெற்ற வளர்ச்சியை நீர் அடையாளங்காணும் எவரேனும் இரு நவீன ஓவியர்களின் படைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

06. நவீன கலைப்பாணிகளில் ஒன்றான யதார்த்தவாத கலைஞர்கள் கலைப்படைப்பாக்கத்தில் கையாண்ட உத்திகளையும் யதார்த்தவாத கலையின் பண்புகளையும் ஓவியக்கலையை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

07. "சர்ரியலிச" கலை முன் வைக்கும் அக உலக யதார்த்தம் என்றால் என்ன? அதனை சர்ரியலிச ஓவிய சிற்பங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

08. ஹேன்றிமூர் அவர்களின் அருவ சிற்பங்கள் முன்வைக்கும் சமூக யதார்த்தம் யாது?

*****